1954 ஆகஸ்ட் 1



வாழ்க்கை என்பது தீர்த்து வைக்க வேண்டிய ஒரு சிக்கல் அல்ல; பதில் அளிக்கவேண்டிய ஒரு பிரச்சினை அல்ல; அலசி ஆராயவேண்டிய ஒரு மர்மம் அல்ல; அது வாழ்ந்தாக வேண்டிய ஒன்று; அவ்வளவுதான்.

—ஹெரால்டு டபிள்யூ ருவோப்.

221263
472
3-54

அகில தமிழ் நாட்டு ஹாமியோபதி வைத்திய சங்கத்தின் மாத வெளியீடு

விலை அணா ஐந்து

"தி வாய்ஸ் ஆப் ஹோமியோபதி"

1. 'தி வாய்ஸ் ஆப் ஹோமியோபதி' பல அரிய கட்டுரைகளுடன் வெளிவருகிறது.

2. நமது 'தி வாய்ஸ் ஆப் ஹோமியோபதி' யில் பிரசுரிக்க, ஹோமியோபதி வைத்திய சம்பந்தமான கட்டுரைகள் தேவை. உண்மையிலேயே உபயோகமாக உள்ள கட்டுரைகளே ஆசிரியரின் தணிக்கைக்கு பின் பிரசுரிக்கப்படும்.

3. பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திருப்பி அனுப்புவது சாத்தியமில்லை. எனினும் திருப்பி அனுப்பத்தான் வேண்டும் என்று கேட்பவர்களுக்குக் கூடுமான வரையில் திருப்பி அனுப்பப் பிரயத்தனப்படுவோம்.

4. பிரசுரிப்பதற்காக அனுப்பப்படும் கட்டுரைகள் சொந்த அனுபவங்கள், ஆராய்ச்சிகள் முதலிய சொந்த விஷயங்களாக இருக்கவேண்டும். வேறு இடங்களிலிருந்து காப்பிகளாக இருக்கக்கூடாது.

5. நமது பத்திரிக்கையில் பிரசுரிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட கட்டுரைகளின் காபிரைட் 'தி வாய்ஸ் ஆப் ஹோமியோபதி' க்கே உரியதாகும்.

6. 'தி வாய்ஸ் ஆப் ஹோமியோபதி' யில் வெளியாகும் கட்டுரைகளில் உள்ள விஷயங்கள் அனைத்தும் எங்கள் அபிப்பிராயங்களல்ல. கட்டுரையாளர்களின் அபிப்பிராயங்களுக்கு நாங்கள் ஜவாப்தாரிகள் அல்ல.

7. கட்டுரைகள் மிகவும் தெளிவாகக் காகிதத்தின் ஒரே பக்கத்தில் இங்கியினால் எழுதப்படவேண்டும்.

8. மிகவும் விசேஷமாக உள்ள கட்டுரைகளுக்கு ஆசிரியரின் உசிதம் போல் சன்மானம் அளிக்கப்படலாம்.

சந்தா விபரம்:

உள்நாடு ரூ. 3—0—0 வெளிநாடு ரூ. 4—0—0

தனிப்பிரதி 0—5—0

விபரங்களுக்கு:

தி வாய்ஸ் ஆப் ஹோமியோபதி

52, தஞ்சை சாலை, திருச்சிராப்பள்ளி.

தி வாய்ஸ் ஆப் ஹோமியோபதி

ஆசிரியர்: Dr. G. சீதாராம்.

வெளியிடுவோர்: Dr. K. K. முத்து.

1954 ஆகஸ்ட் 1

பொருளடக்கம்

	பக்கம்
பரிசு திட்டம்	2
ஸிபிலிஸ்	3
முதல் உதவி பாடங்கள்	5
ஆண்குறி	7
டிப்தீரியா	11
நோயின் குரல்	17
வாதி மகன் வைத்தியன்	20
18 கட்டுரைகள்	25
கேள்வி போட்டி	26
சென்னை, செங்கற்பட்டு ஜில்லா ஹோமியோபதியர்களுக்கு அறிக்கை	29

பயோகெமிஸ்டிரி வைத்திய முறை

[பிரசுர உரிமை பெற்றது]

மூலம்:—ஜார்ஜ் W. காரே M. D;

தமிழாக்கம்:—Dr. K. K. முத்து

எதிர்பாருங்கள்.

தி வாய்ஸ் ஆப் ஹோமியோபதி

(ஹோமியோபதியின் முன்னேற்ற இதழ்)

மலர் 2 | 1954 ஆகஸ்ட் 1 | இதழ் 5

பரிசு திட்டம்

ஆம்! பரிசு திட்டம் தான்; அதுவும் ஹோமியோபதியர்களுக்குதான். திறமையும், ஆற்றலும், வீர உணர்வுமிருந்தால் கட்டாயம் பரிசு திட்டத்தை அடைந்தே தீரலாம். தமிழக ஹோமியோபதியர்களுக்காக தமிழ்நாட்டின் தலைச்சிறந்த ஹோமியோபதி வைத்திய சங்கமாகிய "அகில தமிழ்நாட்டு ஹோமியோபதி" வைத்திய சங்கத்தாரால் வெளியிடப்படும் ஓர் சிறந்த பரிசு திட்டம். இது மாதிரியான பரிசுகளை உலகில் வேறு எந்த சங்கமுமே அளித்ததில்லை. சிறந்த கட்டுரை எழுதியதற்காக திருக்கழுகுன்றம் Dr. K. M. A. வஹாப் அவர்களுக்கு சென்ற வருடம் எல்லிஸ் பார்கர் எழுதிய "My Testament of Healing" என்கிற புஸ்தகத்தை பரிசாக அளித்தது ஞாபகமிருக்கலாம். கட்டுரை போட்டி; கேள்வி போட்டி முதலியன இந்த இதழில் கொடுக்கபட்டுள்ளது. போட்டியில் கலந்துக்கொள்ளும் நிபந்தனைகளை இந்த இதழிலேயே நீங்கள் காணலாம். உங்களுக்கு பரிட்சை வைத்தால் நீங்கள் உண்மையிலேயே பாஸ் செய்வீர்களாக என்பதை இந்த கேள்வி போட்டியில் கலந்துக்கொள்ளுவது மூலம் காணலாம்.

புட்பங்கள் பரிமளிக்கா நின்ற அழகு பொருந்திய கட்டப்பட்ட கூந்தலையும், இனிய மொழியையுமுடைய பெண்ணே!; அழகு பொருந்திய அன்னத்தை யொத்த நடையையும் தெய்வத்தன்மை பொருந்திய மயில்போலுஞ் சாயலையுடைய பெண்ணே!; கற்கண்டனைய மொழிக் காரிகையே! என கன்னித்தமிழிலே பாடி பெண்ணின் உருவத்தை கவியின் திறமையால் சிருஷ்டித்த தமிழ் நாடே! இதோ ஆயிரமாயிரம் தமிழ் பேசும் ஹோமியோபதியர்களுக்காக, தளராது—தயங்காது வெற்றி பாதையிலே நிற்கும் அகில தமிழ்நாட்டு ஹோமியோபதி வைத்திய சங்கத்தாராகிய நாங்கள் இயற்கை அன்னையின் பேரால் இதோ சமர்ப்பிக்கின்றோம் பரிசு திட்டத்தை.

—தமிழக ஹோமியோபதியர்கள்.

22/263

சென்ற மாதத் தொடர்ச்சி

ஸிபிலிஸ் [என்னும்] பரங்கிரோகம்

—:(திருச்சி G. L. பிரகாசம்):—

முதல் பருவ பரங்கிரோகம்:—பெரும்பான்மையான நோய்களில் முதன்மையான அறிகுறிகள், மூலைக்காம்பு, வாய், குதம், ஆண் பெண் உறுப்புகளின் பூந்தசைகளில் காணும், எதிர்பாராத விதமாக இந்த நோய் கண்களிலும், மூக்கிலும் அல்லது சருமத்தில் புண் உண்டாகி அதன் விளைவாக சீழ்கள் உண்டாகி வடியும். ஸிபிலிஸ் சம்பந்தபட்ட புண்களை கழுவும்பொழுதும், நோய் சம்பந்தபட்ட தாதிகளின் மூலம் சிறு குழந்தைகளுக்கும் இந் நோய் பரவுகிறது- மேலும் தொற்றிக்கொள்ளக்கூடிய கிருமியானது கண்ணாடி சாமான்கள்: ஸ்பூன்கள்; புகைக்குழாய்; ரண சிகிச்சை கத்தி அல்லது ஆயுதங்கள் மூலமும் இதர வகைகளிலும் பரவுகிறது; இவைகள் வியாதியுற்ற மனிதர்கள் மூலம், அவர்கள் உபயோகித்த பாத்திரங்களை சரிவர கழுவி சுத்தம் செய்யாததினாலும் ஏற்படுகிறது.

இயல்பான பரங்கிரோகம்:—இந்த வகையில் புண்களானது சீக்கிரமாகவோ அல்லது பின் தங்கியோ பறங்கிபுண்களாக தோன்றும், முதல் குறி சருமத்தில் சினப்புகள் தோன்றும், அத்துடன் டான்ஸில்கள் புண்களாகவும், எலும்புகளில் வலியுள்ளதாகவும், குரல்வளை மற்றும் மூக்கு தசைகளில் பரவக்கூடியதாகவும் இருக்கும். இது தனித்தோ, அல்லது எப்படியாயினும் மற்ற முக்ய உறுப்புகள், அல்லது உறுப்புகளின் தனி பாகங்களில் தாக்கும், வாயின் பூந்தசைகள், அடிவாய், மூக்கு, ஆசனவாய், ஆண், பெண் ஜனனேந்திரிய உறுப்புகள், சருமம் அதை சேர்ந்தவை, நிணநீர் ஓட்டம் (Lympha tiesystem), தசையும், தசை நார்களும், மூளையும் அதனுடைய தசைகளும், எலும்புகளும், எலும்பை மூடிக்கொண்டிருக்கும் தசைகளும், கிருஷ்ணபடலம் (Iris), விருஷணக் கொட்டைகள், ஓவரிகள், மற்றும் ஈரல்களும் பாதிக்கப்படுகின்றன. புண்களானது வட்ட வடிவமாகவும், செம்பு நிறத்திலும் இருக்கிறது. இந்த நோயானது அநேகமாக ஒரு தடவையில் ஒரு உறுப்பையே தாக்கலாம். ஆனால் நோய் தானாகவே உற்பத்தியாகி பல உறுப்புகளையும் அதே நேரத்தில் தாக்கலாம்.

இரண்டாம் பருவ பறங்கிரோகம்:—இந்த நோயானது சுரத்துடன் காணும். இதற்கு Syphiliticeruptive Fever (பறங்கிப்புண் சுரம்) என்று பெயர். முதலில் பூந்தசைகளில் பரவி அளவுக்கதிகமாக வளர்ச்சியடைந்து வாய், அடிவாய் அதைச்சார்ந்த பாகங்கள், மற்றும் ஜனனேந்திரிய உறுப்புகளின் பூந்தசைகள் முதலியன வகைகள் பாதிக்கப்படும்; பிறகு சருமத்தில் புண்கள் உண்டாகி "Syphilides" என அழைக்கப்பெறும்; முடிவாக கருவிழி படலத்தில் புண்கள் உண்டாகும் இரண்டாம் பருவ பறங்கி ரோகத்தின் முதல் குறி சரீரம் பூராவும் சுலபமற்றதாக அதாவது ஒருவித இடைஞ்சலாக தோன்றும்; அதன்பின் கடுமையான தலைவலி, தோள்பட்டையில் அமுக்கமும் வலியும், முதுகில் வலி, கால்களிலும், பாதங்களிலும் வலி, அதிகமான தளர்ச்சி, அமைதி

பின்மை, தூக்கமின்மை, அதிக தாகம், மலச்சிக்கல், சரும உஷ்ணத்துடனும் படையுடனும் இருக்கும். கழுத்தை சுற்றியுள்ள கோளங்கள் வீங்க ஆரம்பித்து, புண்கள் கருப்பு நிறமாக மாறுகிறது.

மூன்றும் பருவ பறங்கிரோகம்:—இது இரண்டாம் பருவ பறங்கி ரோகத்திலிருந்து மாறுபட்டது, இது தொற்றுவியாதியல்ல; முதல் நோய் தோன்றிய நாளிலிருந்து 20 வருஷங்களுக்குபின் [illegible] நோயின் மூன்றும் நிலை வருகிறது. சரீரத்தின் பல பாகத்திலும் கடினமான கட்டி உண்டாகிறது.

சிகிச்சை:—

மெர்க்கூரியஸ் கரோசிவஸ்; சின்னபாரிஸ்; ஆசிட் நைட்ரிக்; அகோனைட்; ஆர்ஸனிகம்; ஸிலிகா; அர்ஜெண்டம் நைட்ரிகம்; காஸ்டிகம்; சல்ப்பர்; தூஜா.

அரையாப்புக்கட்டி:—ஆசிட் நைட்ரிக்; காலி அயோடம்; அபிஸ் மெல்லிபிகா; கிராபைடிஸ்; ஹீப்பர்சல்ப்பர்; தூஜா; ஆர்சனிகம்; லாச்சஸ்; கார்போவிஜி.

சருமத்தில் சிவந்த தடிப்பு:—ஆரம்; ஆர்ஸனிகம்; காலி அயோடம்; மெர்கூரியஸ்; ஆசிட் நைட்ரிக்; சல்ப்பர்.

சத்ய

தங்கரசம்

சகல விதமான வியாதிகளுக்கும் மின்வேக நிவாரணி 1 புட்டி கைவசமிருக்குமேயானால் சகலவித வியாதிகளிடமிருந்தும் காப்பாற்றிக்கொள்ளலாம்.

1 புட்டி ரூ. 2—8—0

விபர கேட்லாக்கிற்கு எழுதவும்.

N. B:—இன்னும் கஸ்தூரி, கோரோஜனை, சஞ்சீவி மாத்திரை தினுசுகளும், லேகியங்களும் கிடைக்கும்.

டாக்டர் ஜி. எல். சாரி,

சத்ய வேத வைத்தியசாலை,

53, தஞ்சை ரோடு, திருச்சிராப்பள்ளி.

முதல் உதவி பாடங்கள்

—:(G. L. பிரகாசம்):—

பழுவெலும்பு என்றால் என்ன? எத்தனை ஜோடி பழுவெலும்புகள் இருக்கின்றன?

பழுவெலும்புகளானவை வளைந்துள்ள பன்னிரண்டு ஜோடி எலும்புகள்; அவைகள் முதுகு முள்ளெலும்புகளிலிருந்து சரீரத்தின் முன்பக்கம் வரையில் வருகின்றன. அவைகள் மேலேயிருந்து வரிசையாய் முதலாவது, இரண்டாவது என்பதாக கணக்கிடப்பட்டிருக்கின்றன. பழுவெலும்புகள் முதுகிலிருந்து மார்பு வரையிலும், நீள எலும்பால் செய்யப்பட்டவை அல்ல; முன்பாகத்தில் கொஞ்சதூரம் ஜவ்வால் செய்யப்பட்டிருக்கிறது. மேல் பாகத்திலுள்ள ஏழு ஜோடி பழுவெலும்புகளும் ஜவ்வினால் மாரெலும்போடு இணைக்கப்பட்டிருக்கின்றன. அவையின் அடியிலிருக்கும் ஐந்து ஜோடி பழுக்களும், மார்பெலும்புடன் பொருந்தாமல் அவைகளின் ஜவ்வுகள் ஒன்றோடொன்று சேர்ந்திருக்கின்றன. கடைசியான இரண்டு ஜோடி எலும்புகளும் முன்னால் வேறொன்றோடும் பொருந்தாமல் தனிதனியாகவிருக்கின்றன. பழுவெலும்புகள் மார்க்கூட்டைச் சுற்றிக்கொண்டு நுரையீரல், இருதயம், கல்லீரல், இரைப்பை, மண்ணீரல் முதலானவைகளைக் காப்பாற்றுகிறது.

தொங்கும் விலா எலும்புகள் என்று எவைகளுக்கு பெயர்?

விலா எலும்புகள் ஒவ்வொரு பக்கத்தில் 12 இருக்கின்றன. இவையெல்லாம் முன்புறத்தில் மார்பு எலும்புடன் சேரவில்லை. முதல் 7-ஜதை விலா எலும்புகள், மார்பு எலும்புடன் நேராகச் சேருகின்றன. 7, 9, 10-வது ஜதை விலா எலும்புகள் ஒன்றோடொன்று குருத்தெலும்பினால் (Cartilage) சேர்த்து இருக்கின்றன இவ்விரண்டு ஜதை விலா எலும்புகளுக்கும் தொங்கு விலா எலும்புகள் (Floating Ribs) என்று பெயர்.

காறை எலும்பு, ஆர எலும்பு, முழங்காற்சில் இவை எங்குள்ளன?

தொடை எலும்பின் (Femur) மேல் நுனி இடுப்பெலும்புக்குழியில் படிந்திருக்கிறது. தொடை யெலும்பின் கீழ் நுனியுடன் இரண்டு கீழ் கால் எலும்புகள் சேர்ந்துள்ளன. இவைகளுக்குக் கீழ்க்கால் உள் எலும்பு (Tibia) என்றும் கீழ்க்கால் வெளி எலும்பு (Fibula) என்றும் பெயரிடப்பட்டிருக்கின்றன. கீழ்க்கால் எலும்புகளும், தொடை எலும்பும் சேருமிடத்தில், முன்புறத்தில் ஒரு வட்டமான சிறிய எலும்பு இருக்கிறது. இதன் பெயர் முழங்காற்சில் (Patella) எனவும் பெயர்.

மூட்டு (Joints) என்றால் என்ன?

எலும்புகள் ஒன்றோடொன்று சேருமிடத்திற்கு மூட்டு என்று பெயர்.

மூட்டுகளின் பயன் என்ன?

எலும்பு மூட்டுகள் அசைவுக்கு உதவுகின்றன. இதனை அசையும்

மூட்டுகள் (Movable Joints) என்கிறோம். தோள், இடுப்பு, கை, கால்கள் மூட்டுகளால் அசைகின்றன.

மூட்டுகளை எத்தனை பிரிவுகளாக பிரிக்கலாம்?

பந்துக் கிண்ண மூட்டு (Ball and Socket Joint); கீல் மூட்டுகள் (Hinge Joints); மூளை மூட்டு (Pivot Joint); வழுக்கு மூட்டுகள் (Gliding Joints) என பிரிக்கலாம்.

பந்துக் கிண்ண மூட்டுக்கும், கீல் மூட்டுக்கும் என்ன வித்தியாசம்?

பந்துக்கிண்ண மூட்டு எல்லாப் பக்கங்களிலும் எல்லாத் தலங்களிலும் அசைவு ஏற்பட வசதி அளிக்கிறது. இடுப்பு மூட்டும் (Pelvic Girdle) தோள்பட்டை மூட்டும் (PecToral Girdle) பந்துக் கிண்ண மூட்டுக்களாகும் இவை தொடை எலும்பின் மேல் நுனி, பந்து போல் கோளமாக, இடுப்பெலும்புக் குழியில் பொருந்தியிருக்கிறது. இந்த இடுப்பு மூட்டு, கால்களை நாலா பக்கங்களிலும், எல்லா பாகங்களிலும் அசைக்கவதுவாக இருக்கிறது. மேற்கை எலும்பின் மேல் நுனி பந்து வடிவத்தில், தோள்பட்டை எலும்புக் குழியில் பொருந்தி யிருக்கின்றன. இவ்வித மூட்டின் அசைப்பினால் கைகளை நாலா பக்கங்களிலும், எல்லாத் திசைகளிலும் அசைக்க முடிகிறது.

தோட் பூட்டைப்பற்றி விவரமாய்ச் சொல்?

புய வெலும்பின் மேல் கோடியும், தோட்பட்டை யெலும்பின் தோளுக்கு சமீபமாயுள்ள மூலையிலிருக்கும் ஆழமில்லாத குழைச்சும், சேர்ந்த பூட்டுக்கு தோள் பூட்டு என்று பெயர். இந்த குழைச்சானது ஆழமில்லாததினால் புயவெலும்பானது அதிலிருந்து சுலபமாய் நழுவக் கூடும்.

சதைகள் எவ்விதமாய் பிரிக்கப்பட்டிருக்கின்றன?

சரீரத்திலுள்ள சதைகள் இரண்டு விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவை நம்முடைய சுவாதீனத்திலிருப்பவைகளும், நம்முடைய சுவாதீனத்திலில்லாதவைகளுமாக சேர்ந்தது.

நம்முடைய சுவாதீனத்திலிருக்கும் சதைகளைப்பற்றி விவரி?

நம்முடைய சுவாதீனத்திலிருக்கிற சதைகள் கைகால்களிலும், தலையிலும், கழுத்திலும், முண்டத்தின் வெளிப்புறத்திலும் காணப்படுகின்றன. அவைகளின் கோடிகள் வெவ்வேறு எலும்புகளில் ஒட்டப்பட்டிருக்கின்றன; அவைகள் ஒரெலும்பிலிருந்து மற்றோரெலும்புக்குப் போகும்போது ஏதாவதொரு பூட்டின் வழியாய்ச் செல்கின்றன; அவைகளுக்குரிய சுருக்கவும், நீட்டவும் கூடிய சக்திதான் சரீரம் அசைவதற்குக் காரணம். சதையானது ஒரு பூட்டின் வழியாய்ப் போகும் போது, அது கயிறு போலாகுவது வழக்கம். இரத்தக்குழாய்கள் சதைகளில் பாய்ந்து அவைகளுக்கு ஊட்டம் கொடுக்கின்றன சதைகளுக்குப் போகும் நரம்புகள், அவைகளை மூளைக்கும் முள்ளந்தண்டுக் கொடிக்கும் உள்ளடங்கி யிருக்கும்படியாய்ச் செய்கின்றன.

பயோகெமிஸ்ட்ரியில்

ஆண் குறி

—:[Dr. K. M. A. வஹாப், (Homeo)]:—

மனிதன் மண்ணினால் படைக்கப்பட்டான் என்று நான் எழுதினால் இதை யாரும் புதிது என்று எண்ணமாட்டார்கள். மேலும் மனிதன் தாவர வர்க்கத்தின் மூலம் உற்பத்தியானதாகவும் சொல்லப்படுகிறது. தாவரத்திற்கும் மனித உடம்புக்கும் வேண்டிய வஸ்துக்கள் எல்லாம் மண்ணில் இருக்கின்றன. அவைகளெல்லாம் மண்ணில் இல்லாவிட்டால் தாவர வர்க்கமும், அதன் மூலம் மானிட வர்க்கமும் தோன்றியிருக்காது. தேகத்திலிருக்கிறபடியே மண்ணிலும், தாவர வர்க்கத்திலும் சம நிறையாய் உப்புக்கள் இருக்கின்றது.

தேகமே ஜீவ அணுக்களால் ஆகிறது. பலவித ஜீவ அணுக்கள் தேகத்தின் வெவ்வேறு பாகங்களில் சதைகளையும் இந்திரியங்களையும் உண்டாக்குகின்றது. நம் சரீரத்திலுள்ள ஜடதாதுக்கள் அணுக்களாக இயற்கையாகவேயிருந்து வேலை செய்வதால்தான் பயோகெமிஸ்ட்ரியைக் கண்டறிந்த மேதை சூஸ்லரும் மருந்தை அணுவாக்கித்தர முயன்றார். உடம்பில் உள்ள ஜடதாதுக்கள் 1000 பாகம் இரத்த அணுக்களில் எந்த விகிதத்தில் இருக்கின்றன என்பதை கீழே பாருங்கள்:—

Ferr. Phos (இரும்பு பாஸ்பேட்)—*0.998*
Calc. Phos (சுண்ணாம்பு பாஸ்பேட)*0.094*
Kali. Phos (மரஉப்பு பாஸ்பேட்)—*2.343*
Nat. Phos (பூநீர் உப்பு பாஸ்பேட்)—*0.633*
Mag. Phos (காந்தமண் உப்பு பாஸ்பேட்)—*0.060*
Kali Sulph (மரகந்தக உப்பு பாஸ்பேட்)—*0.132*
Nat. Mur (பூநீர் கரியுப்பு பாஸ்பேட்)—*0.344*
Kali. Mur (மரக்கரியுப்பு பாஸ்பேட்)—*3.079*

இந்த விகிதத்தில் இருப்பதால்தான் வீரியப்படுத்தின மருந்து கொடுக்கப்படுகிறது. வீரியப்படுத்தாது கொடுத்தால் இரேகத்திலுள்ள தாதுக்கள் மருந்தை கிரகிக்க முடியாது. பூமியில் இந்த பன்னிரண்டு உப்புக்களும் கிடைக்கின்றன. அதை எடுத்து சுத்திசெய்து பின்னர் வீரியப்படுத்தப்பட்டு மருந்தாக அளிக்கப்படுகிறது. மருந்தை வீரியப்படுத்தும் முறையை நீங்கள் நன்றாக அறிவீர்கள். வீரியப்படுத்துவதில் 3x ட்ரியூட்ரேஷனில் *1000* பாகத்தில் *1* பாகம் உப்பு கிரகிக்கப்

படுகிறதாக அறியப்படுகிறது. ஆகவே 3x-க்கும் கீழாக மருந்தை உபயோகிப்பதில் பலனில்லை என்று தெரிகிறது.

இரேகத்தின் வளர்ச்சிக்கும் பூர்த்திக்கும் அவசியமாகவுள்ள பாஸ்பேட்ஸ் (**Phosphates**) நம் தாது உப்புக்களான கல்கேரியா-பாஸ் போரிகா (Cal. Phos), பெர்ரம் பாஸ்போரிகா (Ferr. Phos), காலி பாஸ்போரிகா (Kali. Phos), மாக்னேஷியா பாஸ்போரிகா (Mag Phos), நாட்ரம் பாஸ்போரிகா (Nat Phos) இவைகளிலும்,

கரியுப்பு (Chlorides) காலி மூரியாடிகம் (Kali Mur), நாட்ரம் மூரியாடிகம் (Nat Mur) இவைகளிலும்,

கந்தக உப்பு (Sulphats) கல்கேரியா சல்ப்யூரிகம் (Cal. Sulph), காலி ஸல்ப்யூரிகம் (Kali. Sulph), நாட்ரம் சல்ப்யூரிகம் (Nat Sulph) இவைகளிலும்,

பிளூரெட்ஸ் (Flowrides) கல்கேரியா ப்ளோரிகா (Cal. Flowr), ஸிலிஸியா (Silicea) இவைகளிலும் இருக்கின்றன.

இவைகளையெல்லாம் நோக்கும்போது இரேகத்திலுள்ள ஜடதாது உப்புக்களாகிய பன்னிரண்டுமே பயோகெமிஸ்ட்ரியாகிய பன்னிரண்டு உப்புக்கள் என்பது நன்கு புரிந்துவிட்டது. இவ்வுப்பணுக்களில் ஏதேனும் ஒன்று குறைந்தால்தான் உடலில் குழப்பங்கள் ஏற்படுகின்றன. அவைகளையே கண்டபடி பெயரிட்டு வியாதியாக்கி விடுகிறோம்.

Cal Phos ஒரு சுண்ணாம்பு (of lime) பாஸ்பேட் என்று பார்த்தோம். இச்சுண்ணாம்பு பாஸ்பேட்டுக்கும் மூத்திரகுண்டிக்காய் வியாதிக்கும் சம்பந்தம் உண்டு. சுண்ணாம்பு பாஸ்பேட் அணு குறைந்தால் ஆல்பியுமென் செயலற்று அன்னிய பதார்த்தமாகி அதிகம் பெருகிக்கொண்டே போகிறது. இவைகள் மூத்திர வழியாக வெளிப்படுவதால் கோளாறு உண்டாகிறது. குறைவடைந்த கல்கேரியாபாஸ் கொடுத்தால் ஆல்பியுமென்னோடு சேர்ந்து பழையபடி செயல்கள் ஆரம்பமாகின்றன; குழப்பமும் நீங்குகிறது. கல்கேரியாபாஸ் குறைவதால் எக்ஸிமா (Eczema) என்ற சர்மநோயும் உண்டாகிறது. இதேபோல் மற்ற உப்புகளின் குறைவாலும் அவை அவைகளுக்கேற்ப பல வியாதிகள் உண்டாகிறது. எவ்வுப்புக்குறைந்ததோ அவ்வுப்பினை கண்டறிந்து—தீர்க்கமாக—மருந்தைக் கொடுத்துவிட்டால் முன்போல் இரேகம் ஒழுங்காக வேலை செய்ய ஆரம்பிக்கும். இதைப் போதிப்பதே பயோகெமிஸ்ட்ரியாகும்.

எந்தெந்த உப்பால் எந்தெந்த வியாதிகள் உண்டாகிறது

என்பதை நீங்கள் எல்லோரும் படித்திருப்பதால் அதிகமாக தீட்டி இடத்தை வீணாக்க விரும்பவில்லை.

இனி பயோகெமிஸ்ட்ரி ஆண்குறி வியாதியில் எவ்வாறு பயன்படுகிறது என்பதைப்பற்றி காண்போம். ஆண்குறி வியாதி என்றதுமே எல்லோருக்கும் புரிந்துவிடும் வியாதியின் லக்ஷணம் ஆனால் வியாதியின் குறிகளில் பயோகெமிஸ்ட்ரி எப்படி உபயோகப்படுகிறது என்பதைப்பற்றி மட்டும் பார்ப்போம்.

கல்கேரியா ப்ளோரிகா:—நீரண்டம் விரிவடைந்திருந்தால் சுருங்கச்செய்யும். நீர்குலை—விரை விரிவாகப் பெருத்தல், கல்போல் கடினமாகி நீர் சுரப்பு உண்டாகுதல்; கல்லண்டம். குறியின் நுனியிலுள்ள புண் கடினமாய் கல்போல் காணப்படும். விரைகள் சிறுத்து இந்திரியமும் சுக்கில நீரும் ஒழுகிக்கொண்டே இருத்தல். தளர்ந்த ஆண்குறியைப் பலமடையச் செய்யும்.

கல்கேரியா பாஸ்பாரிகா:—விரை வீக்கம், வாய் வண்டம், முஷ்டி பிரயோகத்தினால் ஸ்கலிதமாக்கல், விரை தளர்ந்து அதிகமாக தொங்குதல். நீரண்டம், விரை கவசங்களில் இறங்கும் குடல்வாதம். பாண்டு ரோகத்துடன் வெட்டை; பிசின் போன்ற ஆல்பியுமென்னுடன் சீழ் வருதல். ஜனன இந்திரியங்களை மிக்க பலமாக்கும். இதை மற்ற மருந்துகள் கொடுக்கையில் மத்தியிலும் கொடுக்கலாம்.

கல்கேரியா ஸல்ப்யூரிகம்:—வெட்டை அல்லது மேகத்தினால் அரையாப்புக்கட்டி. ஸ்கலிதத்தினால் உண்டான ரோகங்கள். கோளங்களில் இரணம்; மலட்டுத்தனம். புண்ணில் சீழ் கட்டிவிட்டால் கொடுக்கலாம். இரத்தமும் சீழும் கலந்து வரும் வெட்டை.

பெர்ரம் பாஸ்பாரிகம்:—வலது விரையில் மந்த வலி. வெட்டையில் தாபித ரோகம்; ஸ்கலிதம். வெட்டை, வெள்ளையில் சுரம். மேகக்கிரந்தியின் போது வீக்கம், சூடு, தெரிக்கும் கடுமையான வலி ஆகிய குறிகளுடன் தொடையிடுக்கில் ஏற்படும் கட்டிகள். வெட்டை உள்ள முக்கப்பட்டதால் விரைகளில் வீக்கம், வேக்காடு, சுரம், எரிச்சல் ஆகியவைகள் ஏற்படல்.

காலி மூரியாடிகம்:—அரையாப்புக்கட்டி, தொடை சந்துகளில் வலி, வீக்கம் ஏற்படல். ஆண்குறியின் நுனியில் காணும் புண்கள்; வெட்டை, மேகரோகம். விலைகொடுத்து வாங்கும் கெட்ட ரோகங்களால் விரையில் வீக்கம். இறுகிய வெள்ளை அல்லது மஞ்சள் சீழ் மூத்திரத்தில் வருதல்.

காலி பாஸ்பாரிகம்:—அதிக காமவெறி கொண்ட பேர்வழி. கைமுட்டி தன்மை. அபரிமித புணர்ச்சியால் வெள்ளை. புணர்ச்சிக்குப்பின் நரம்புத்தளர்ச்சியும் பலவீனமும் ஸ்கலிதமும் ஏற்படல். இரத்த வெட்டை தோன்றல். அதிகமான உழைப்பால் ஆண்தன்மை குறைவேற்பட்டாலும் பயன்படும்.

காலி ஸல்ப்யூரிகா:—பிசின் போன்று மஞ்சள், பச்சை வர்ண சீழுடன் வெட்டை; வாய்வண்டம்—தந்தி வெட்டை.

மக்னேஷியா பாஸ்பாரிகா:—சதா காமம் பற்றிய நினைப்பு. அதன்படி அடிக்கடி சம்போகம் செய்வது. அதனால் கெடுதி எதுவும் ஏற்படுவதில்லை. வெள்ளையின்போது குத்து வலி; சதையடைப்பு.

நாட்ரம் மூரியாடிகம்:—நாட்பட்ட வெட்டை; தெளிந்த நீரும் எரிவுடன் காணும் பிசின் போன்ற சீழும் வருதல். பிராஸ்டிடிக் திரவம் கழிதல். சம்போகத்திற்குப் பின் விந்து கழிதல். அரைக்கும் விரை கோசத்திற்கு மிடையே படையுண்டாகி நமைச்சல் உண்டாதல் மலட்டுத்தனம். துர்நாற்றம். நீர் போன்ற சீழுடன் காணும் நாள்பட்ட மேகரணம். விரையில் நீர் கோர்வைக்காணல்; விரையிலும் நரம்பிலும் வேதனை.

நாட்ரம் பாஸ்பாரிகம்:—கனவு காணாமலே ஸ்கலிதமுண்டாதல், சம்போகத்தில் இச்சை குறைந்துபோதல், இச்சையில்லாமலே ஆண்குறி நிமிர்ந்திருத்தல், சுக்கிலம் நஷ்டமானபின் பலவீனம், நடுக்கம் உண்டாதல்.

நாட்ரம் சல்ப்யூரிகம்:—வெளியிலும் உள்ளும் மேகரண பருக்கள். ஆசனவாயில் உண்டாகும் பாலுண்ணி (Wart) ஜனன இந்திரியங்களில் அடாத நமைச்சலால் சொரிந்துகொள்ளல். கெட்டியான மஞ்சள், பச்சை வர்ண வெள்ளை வலியின்றி நாட்பட்ட வெட்டையில் தோன்றல். விரை கோசங்களில் வியர்த்தல்; அதிக காமம். நீரண்டம்; உஷ்ணக்கட்டிக் காணல்.

சிலிசியா:—நாட்பட்ட மேகரணம். சதைகள் தடித்தல்; பிராஸ்டிடிஸ் வியாதிகள். நீரண்டம்; இறுகி மஞ்சளாயும் சீழுடன் நாற்றமுமுள்ள நாள்பட்ட வெட்டை. விரை கோசத்தில் வியத்து நமைச்சலுண்டாதல். சீழ்கட்டின அரையாப்புக்கட்டி. எல்லா சமயங்களிலும் கொடுக்கலாம்.

★ "டிப்தீரியா"

[Dr. வில்லியம் மார்கன் M. D;]

(தமிழாக்கம்:—Dr. K. K. முத்து)

பெல்லடோன்னா:—இந்த மருந்தானது ஸ்கார்லட்சுரத்தில் முக்யமாக உபயோகப்படுகிறது, டிப்தீரியாவில் உலர்ந்த தொண்டையாக இருக்கும் நிலையிலும் இது பெரிதும் உபயோகப்படுகிறது. ஸ்கார்லெட் சுரத்தில் இது துரிதமாக வீர்யமுள்ள நோய் தடுப்பு மருந்தாக இருந்து வருவதை உலகத்தின் விபரதொகுதிப்படி குறித்து வைத்துள்ளார்கள், முக்யமாக ஜெர்மனியில்.

வியாதி உண்டாகும் நிலையும அல்லது விஷப்பிரதி விஷ விவரணமும் அதிகபடியான அறிகுறிகளை கொடுக்கிறது, இவைகளே டிப்தீரியாவின் அறிகுறிகளை மிகவும் பரஸ்பரம் ஒத்து காட்டுகின்றன; இலேசான சித்தப் பிரமையையும் உண்டாக்குகின்றது என்பதை நான் கொடிய ஆரம்பவியாதிகளில் பார்த்துள்ளேன்; வாயிலும், அடிவாயிலும் மஞ்சள் கலந்த வெள்ளை நிறமான மாசுபடிகிறது; டான்ஸில்கள்; அடிவாய், அண்ணவாகியில் தொங்கிகொண்டிருக்கிற திரை, மற்றும் உணவுக்குழல் முதலியவைகளில் ஈட்டியால் குத்துவது போன்ற வலியும், விழுங்க முடியாமையும், அத்துடன் தொண்டையில் இசிவுடன் கூடிய பிடிப்பும் உண்டாகிறது. ஆனால் உண்மையான டிப்தீரியா பீதியின் நாசகாரமான இருளின் நிழலை பூர்ண விவரணமாக கொண்டிருக்கவில்லை; இவைகளெல்லாம் ரச சம்பந்தமான தயாரிப்புகளின் ஒன்றை ஒத்திருக்கிறது. எப்படியெனில் மெர்க்குறி கொடுக்கபடவேண்டியவர் அருவருக்கதக்க மூச்சுவிடுதல், அநேகமாக டிப்தீரியாவை பிரதிபலிக்கிறது; தொண்டையிலுள்ள கோளங்களில் வலியுள்ள வீக்கம் உண்டாகிறது, அத்துடன் அளவுக்கதிகமான உமிழ் நீரும் சுரக்கிறது; தொண்டை, அடிவாய், உணவுக்குழல், மற்றும் டான்ஸில்கள் முதலியவைகளில் வீக்கம் உண்டாகிறது, பிறகு அந்த இடங்களில் புண்கள் உண்டாகிறன. இத்துடன் கூட மற்றவைகளை கவனித்தால் வியாதி உண்டாகும் நிலையில், விழுங்க சிரமத்தை

★ Translated by kind permission of S. S. Dey From pages 17 to 49; 58 to 77; 88 to 123 of "Morgan's Diptheria" by William Morgan M. D; published by sett dey & Co calcutta. Price Rs. 3/- (Copyright).

யும்; மூச்சடைத்து போகும் உணர்ச்சியும் உண்டாவதையும் நாம் காண்கிறோம், மேலும் ஆகாரமும், குடிக்கும் பானங்களும் மூக்கின் வழியாக திரும்பி வருகிறது.

முடிவாக, மெர்க்குரியானது உண்மையான டிப்தீரியாவின் விவரணத்தை காட்டக்கூடிய நிலையில் அடிவாயிலும், அதைச் சுற்றியுள்ள பாகங்களிலும் வேலை செய்ய வல்லது. இவைகளே என்னுடைய அநுபவகாலமான 1858-லிருந்து இன்றுவரை (புத்தகம் எழுதிய காலம்) இந்த இரண்டு மருந்துகளே நல்ல பலனை அளித்திருக்கிறது, ஹானிமென் அவர்கள் காலரா வியாதியில் எளிதில் மறக்க முடியா வாசகத்தை அளித்தார், அதாவது அந்த வியாதிக்கு, காம்பர், குப்ரம் மற்றும் விராட்ரம் என்று, நான் கூறுகிறேன், ஹோமியோபதி சட்ட திட்டத்தில் எதாவது நம்பிக்கை இருக்குமானால், பெல்லடோனா மற்றும் மெர்க்குறி ஆக இரண்டுமே டிப்தீரியாவில் பிரதான மருந்துகளென சொல்வதுடன்கூட ஹைட்ரோகுளோரிக் ஆசிட்டும் மேல் உபயோகத்துக்கு நல்லது என கூறுகிறேன்.

ஆர்ஸனிகம் ஆல்பம்:—இந்த வீர்யமுள்ள, விலைமதிக்க முடியாத மருந்தானது டிப்தீரியாவின் முதல் நிலையிலும், கொடிய நிலையான கடைசியிலும் உபயோகப்படக்கூடியது.

ஆர்ஸனிகத்தின் நோய்தீர்க்கும் அளவுக்கு போட்டியாக சுகத்திற்கு தொந்திரவையும், அதே நேரத்தில் சுகத்திற்கு சீர்படுத்துவதையுமான குறிகளுக்கு அகோனைட் இருக்கிறது. அகோனைட் உறுப்புகளின் கோளாறுகளில் இருந்து வேலை செய்கிறது, ஆர்ஸனிகம் அதிகமான பலத்தில் வேலைசெய்கிறது. அகோனைட்டின் சுரமானது இலேசாகவும் நிலையற்றதாகவும் இருக்கும்; ஆனல் ஆர்ஸனிகத்தில் குளிர் அதிகமாக பதிந்து இருக்கும், மேலும் இருதயத்தில் இரத்தமானது அதிக வேகமாக பாய்ந்து வேலைசெய்யும். டையாயிடு சுரத்தில் அகோனைட் ஆரம்ப நிலையில் வேலைசெய்கிறது, ஆர்ஸனிகம் அதிகமாக டைபாயிடுவின் கொடிய நிலையில் வேலைசெய்கிறது.

டைபாயிடு சுரத்தில் ஆர்ஸனிகமானது அதிகமான குளிர் இருக்கும் பொழுதும், சுரத்தின் தன்மையானது அதிகமான எரிச்சலுடன் கூடிய சூடாகவும், வியர்வையானது அதிகமாக பலஹீனத்துடனும், விஷத்தின் தன்மையால் ஜீரசக்தியானது அதிகமாக பாதிக்கப்பட்டும் இருக்கும்.

அகோனைட்டுக்கும் ஆர்ஸனிகத்திற்கும் உள்ள ஒத்த இணைப்புகளை ஒவ்வொரு வியாதிகளிலும் நான் சொல்கிறேன். காலரா கேஸை எடுத்துக்கொள்ளுங்கள், காலராவில் அகோ-

னைட் இலேசான அறிகுறிகள் இருக்கும்போதும், நோய் இலேசான அறிகுறிகள் இருக்கும்போதும் போதுமான அளவு வேலை செய்ய வல்லது; ஆனல் கீழ்க்கண்ட அறிகுறிகள் இருக்கும் போது, அந்த நோயுடன் ஆர்ஸனிகமே எதிர்த்து போராடுகிறது.

அதாவது காலராவின் கொடிய நிலை உள்ளதாக இருக்கும் போதும், அத்துடன் கடுமையான வலிப்பு, வாந்தி, அரிசிகலந்த தண்ணீர் போன்ற மலம், சருமத்தில் மங்கிபோன நிறத்துடன் டன் சலவைக்கல் சில்லிப்பு போன்ற சில்லிடுதலும், அதிகமான சக்தி இழத்தலும், தவிர்க்கமுடியாத தாகத்துடன் ஒடுக்கமான நாடியுடனும் இருக்கும்போதும். திமிர்வாதம், காக்காய்வலிப்பு, அநேகவிதமான சுரம், அதாவது பித்த உபாதியினல் சுரம், அஜீர்ண சம்பந்தபட்ட சுரம், வாதரோக சுரம், டைபஸ் மற்றும் டைபாய்டு போன்ற சுரங்களில் முக்ய கட்டங்களில் ஆர்ஸனிகமானது வீர்யமுள்ள மருந்தாக வேலைசெய்கிறது. அடிக்கடிவரும் சுரங்களிலும், ஒட்டுவாரொட்டியான சுரங்களிலும் இது மிகவும் அபூர்வமாக வேலைசெய்கிறது. டிப்தீரியாவின் கொடிய நிலையில் உலர்ந்த தொண்டையில் துர்மாமிசம் வளர்ச்சியடையும்பொழுது ஆர்ஸனிகம் வியாதியின் மூலகாரணத்தை வெல்லுகின்றது. இந்த வியாதியில் டான்ஸில்களானது மஞ்சள் நிறமான மாசு படிந்ததாக அல்லது மூடப்பட்டதாக இருந்து, சீக்கிரத்தில், பழுப்பான மஞ்சள் நிறமாக மாறுகின்றது. இந்த மாசு அல்லது படையானது தசைகளில் வெகு எளிதாக பரவுகிறது, மேலும் அடிவாயின் பின்பாகம், தாடையின் பாகம், உதட்டிலும் கூட பரவுகிறது. இது குரல்வளையில் வியாபித்து, இசுவுடன் கூடிய மூச்சடைப்பையும், இருமலையும் உண்டாக்கும். இருமி உமிலக் கூடிய எச்சலில் அதிகமான மாசுகள் இருக்கும். சுவாசம் விடுதல் இறந்த பிணம் போன்ற வாடையாக இருக்கும். சுரமும் இருந்து, தலையும் கொஞ்சம் கனதியாகவும், துரிதமான நாடியுடனும், அதிக உஷ்ணத்துடனும் எரிவுடனும் சருமம் இருப்பதுடன் மாலை வேளையில் சித்த பிரமையும் இருக்கும்.

மெர்குறி தயாரிப்புகளைவிட வாயின் மெல்லிய பூந்தசைகளில் உண்டாகும் துர்மாமிச வளர்ச்சி போன்ற வைகளுக்கு ஆர்ஸனிகத்தை போலவே வேலை செய்ய வல்ல சில மருந்துகளும் இருக்கின்றன.

தொண்டை உலர்ந்து போவதும், எரிச்சலாக இருப்பதும், விழுங்க முடியாமலும், குடிக்க முடியாமலும் இருப்பதற்கும் ஆர்ஸனிகம் நன்கு வேலைசெய்ய வல்லது. அதிக தாகமும், குளிர்ந்த நீர் குடிக்க ஆவலுமிருக்கும். கடைசி நிலையில் ஈளை நோய் போன்ற அறிகுறிகளும் காணும். உதடுகளும் முகமும்

நீல நிறமாக இருக்கும்; முகச்சாயலானது வேதனை, வருத்தம் படக்கூடிய தோற்றமாக இருக்கும், தொண்டை கம்மல், அதே நேரத்தில் குரலையும் இழந்து மிருக்கும், இழுப்பு அதிகரித்து இருக்கும், மூச்சுவிடுதலில் போராட்ட மிருக்கும், நாடியானது தளர்ச்சியாகவும், திடுக்கிடக்கூடியதாகவும், நான்குகால் பாய்ச்ச லில் போகக்கூடியதாகவும் இருக்கும், மேலும் கால் கையானது ஐஸ்போன்ற ஜில்லிப்பாக இருக்கும். இப்பொழுது ஆர்ஸனிகத்தை எடுத்துக்கொண்டு யோசித்து பாருங்கள், ஆச்சரிய கரமாக, அதி ரூபத்தில் எப்படி சரீரத்தில் வேலைசெய்கிறது, அதுமட்டுமா! பெருவாரி நோய் சுரம், ஒரு பிரதேசத்திற்குரிய நோயின் சுரம், ஒட்டுவாரொட்டி சுரம் ஆகிய பல சுரங்களில் தான் எப்படி வேலை செய்கிறது. டிப்தீரியாவின் பலவித நிலை களில் நோயை குணம் செய்வதற்கும், நோயணுகாமல் தடுப்ப தற்கும், ஆர்ஸனிகம் நல்லநிலையை அநுசரிக்கிறது, என்பதாக நான் கூறுகிறேன்.

மெர்க்கூரியஸ் ஸையனேட்டஸ்:—இந்த தயாரிப்பானது மெர்க்கூரியஸ் சொலுபுலி சுடன்கூட முன்னேற்பாடாக, கர்ப்பத் தின் மூலமாக விளைவிக்கப்பட்ட நோயை பரம்பரை பாத்யத்தை தகர்த்தெறியக் கொடுக்கக்கூடியது, ரச சம்பந்தமான மருந்து அதாவது காலோமெல் உண்டவர்க்கும், உருவை குலைக்கக் கூடிய கண்டமாலை வியாதியை பழுதடைய வைப்பதற்கும் கொடுக்ககூடியது. டிப்தீரியாவில் அறிகுறிகள் தோன்றியபின் நன்கு வேலைசெய்ய வல்லது.

லாச்சஸிஸ்:—இந்த மருந்தானது மிருகவர்கத்திடமிருந்து தயாரிக்கப்படுவதாகும். இவை தொண்டையில் துன்பப்படுத்து கிற வலியுள்ள உணர்ச்சியையும், திக்குமுக்காட செய்தலையும், மூச்சடைந்து விடுதலிலும் இது வேலை செய்கிறது. தொண்டையை சுற்றி ஒரு கம்பியினால் போட்டு கட்டுவது அல்லது இறுக்குவது போன்ற உணர்ச்சியும் இருக்கும், இவை ஸ்கார்லெட் சுரத்தின் சில நிலையிலும், கபசம் பந்தமான உலர்ந்த தொண்டையிலும், டிப்தீரியாவிலும், உபயோகபடகூடியது, மெய்யாகவே, இந்த மாதிரியான அறிகுறிகளில் லாச்சஸிஸ் தவறுதல் செய்வதில்லையென்பதை நான் பார்த்திருக்கிறேன்.

காலீ பைக்குரோமிகம்:—டார்டார் எமடிக், மெர்க்குரி, ஆர்ஸனிகம் இவைகளைப்போலவே இந்த மருந்தானது மியூகஸ் மெம்ரேன்களில் வேலைசெய்ய வல்லது. போலி பூந்தசைகளி லும், அடிவாயிலும் ஒட்டிக்கொள்ளக்கூடிய மாசுகள் உண்டாகு தல், அது குரல்வளை, அண்ணவாகி, பிராங்கைல் குழாய் முதலியவைகளிலும் இருத்தல்.

ஸ்பாஞ்சியா:—ஹானிமென் அவர்கள், தைராயிடு கோளங் களின் வீக்கத்தின் தொடர்புகளுக்கு ஸ்பாஞ்சியாவை உபயோ கித்து, அதன் உண்மையான காரணத்தை வெளியில் கொண்டு வர அதனை பிரயோகித்துள்ளார், குரல்வளையில் நன்கு வேலை செய்ய வல்லது. தொண்டைக்கம்மல், பலவீனம், உளர்ந்த வலியுள்ள இருமல், மூச்சுவிடுதலில் சிரமம், முதலியவைகள் இருக்கும். ஸ்பாஞ்சியாவை காற்றுக்குழாயில் சதைபோன்ற கோழை படர்வுடன் கூடிய அழர்ச்சிக்கு ஹானிமென் அவர்கள் கொடுத்துள்ளார். ஹோமியோபதி கண்டுபிடிப்பாளருடன் நீங்களும் சேர்ந்து வெளியில் பலஹீனப்படுத்துகிற அழர்ச்சிக்கு ஒருவேளை அகோனைட் கொடுக்கிறீர்கள், மேலும் அது பூராவும் சௌகரியபடுவதற்கு நீங்கள் ஹீப்பார் சல்ப்யூரிஸின் உதவியை யும் நாடுகிறீர்கள். ஆகையால் ஆயிரக்கணக்கான காற்றுக் குழாயில் சதைபோன்ற கோழை படர்வுடன் கூடிய அழர்ச்சிக்கு இந்த வார்த்தைகள் தெரிவிப்பது யாதெனில் இவைகள் முறையே அகோனைட், ஸ்பாஞ்சியா, மற்றும் ஹீப்பார் சல்ப்யூரி ஸினால் குணப்படுறதென்பதுதான். டிப்தீரியாவில் இது காற்றுக்குழாய் வரையில் பிரவேசித்து நல்ல வேலை செய்கிறது.

அயோடின்:—டிப்தீரியாவில் இந்த மருந்தானது உள்ளுக்கு கொடுத்தலுக்கும், முகரலுக்கும் உபயோகமாகி நல்ல பலனை அளிப்பதாக டாக்டர் கிட் என்பவரும் இதரரும் இதனை சிபார்சு செய்கிறார்கள். நான் இதனை மூன்று கேசிற்கு 1859-இலும், மேலும் 12 வருடங்களுக்கு பின்னும் சிபார்சு செய்து கொடுத்து பார்த்தேன், ஆனால் இதனால் எந்தவிதமான நல்ல பயனும் ஏற்படவில்லை, ஆகவே நான் என் நம்பிக்கைக்குரிய பெல்லடொன்ன; மெர்க்கூரியஸ்; ஹைட்ரோகுளோரிக் ஆசிட் முதலிய வைகளுக்கு திரும்பினேன்.

சல்ப்பர்; சின்கோனா:—இவைகளை நான் பொதுவாக உதவி மருந்துகளாகதான் கொடுப்பது; சல்ப்பர் நல்ல திறமைவாய்ந்த மருந்தாகும், ஆனால் குறிப்பிட்ட வியாதிக்கு குறிப்பிட்ட மருந்து போல் குணமளிக்காது. அநேக கேசுகளில் மிகவும் ஆச்சரிய கரமான முறையில் வேலை செய்கிறது; மேலும் சங்கற்பமாக டர்க்கிஷ்ஸ்நானம், அல்லது உஷ்ணமான தண்ணீரை பஞ்சினால் நனைத்து துடைத்து ஸ்நானம் செய்வது நல்லது. அத்துடன் காடி அல்லது கடல் உப்பு சேர்த்துக்கொள்ளலாம்.

செனகா; காந்தாரிஸ்:—டிப்தீரியாவில் நோயாளியின் திறமை, சக்தி முதலியவைகளை அறியாமல் நான் இந்த மருந்து களை கொடுப்பதில்லை, இருந்தாலும் மருந்தின் வரிசை பட்டிய லில் இதனை நான் சேர்த்திருக்கிறேன், தொழில் செய்வோரின் கவனத்தை ஈர்ப்பதற்காக. செனகா வானது காற்றுக்குழா

யில் சதை போன்ற கோழை படலுடன் கூடிய அழற்சிக்கு நெடுகாலமாக உபயோகிக்கப்பட்டு வந்துள்ளது, முக்யமாக இதன் கடைசி நிலையில் ம்யூகஸ் மெம்ரேன்களிலும், காற்று குழாயிலும் இது முக்யமாக வேலைசெய்து வியாதியை மாற்றுகிறது. ஸெனகாவானது முக்யமாக குரல்வளையிலும் அதனை சார்ந்த காற்றுக்குழாய் வரையிலும் சென்று வியாதியை நீக்குகிறது.

காந்தாரிடிஸ்:—எரிவண்டு கடியினால் ஏற்படும் வீக்கம், அழற்சி, எரிவு முதலியவைகள் டிப்திரியாவில் மெல்லிய பூந்தசைகளில் ஏற்படுவதால் அநேக மருத்துவர்கள் இதனை உபயோகிக்கிறார்கள். ம்யூகஸ் மெம்ரேன்களில் அழற்சி, அடிவாய், டான்சில் முதலியவைகளில் வீக்கம், விழுங்க முடியாமை, குரல்வளையில் பிடிப்பு, வாயின் இரத்த நாளங்களில் புண், துர்நாற்றமுள்ள சுவாசம், அதிகமான உமில்நீர் விழுதல் முதலியனவற்றிற்கு இதனை உபயோகிக்கலாம்.

எரிவண்டு கடிப்பதினால் உண்டாகும் உபாதைகள்:—

1. உஷ்ணத்துடனும், வலியுடனும், சிகப்பாகவும் அழற்சியிருத்தல், மேலும் வீக்கமிருந்தல்.

2. இலேசான மஞ்சள் நிறமாக இருக்கும் மாசுவானது சரியான மஞ்சளாக பூந்தசைகளில் மாறுதல்.

3. ஆயில் ஆப்காந்தாரிடிஸ் கொஞ்சம் எடுத்து நாயின் மூச்சுக்குழாயில் ஊசியின் மூலம் செலுத்திவிட்டால், போலி பூந்தசைகள் வலுவடைந்து காற்றுக்குழாயில் சதைப்போன்ற கோழை படலுடன் கூடிய அழற்சியுண்டாகும்.

(தொடரும்)

1954 ஆகஸ்ட் 8-ந் தேதி மாலை 4-மணிக்கு திருச்சி டவுன் ஸ்டேஷன் ரோடு உருமி தனலெக்ஷிமி வித்யாலயத்தில் சங்க மீட்டிங் நடைபெறும். அதுசமயம் Dr. N. கோவிந்தராஜன் அவர்கள் "க்ஷயரோகம்" என்பது குறித்து பேசுவார். அனைவரும் குறித்த காலத்தில் தவறாது வரவும்.

சென்ற மாதத் தொடர்ச்சி

நோயின் குரல்

—:(சென்னை Dr. P K. சேகரன்):—

ஐயா ஹோமியோபதி வைத்தியரே! வணக்கம். இன்று முதல் இரத்தத்தைப்பற்றிய என் தாக்குதல்களின் மாற்றுருவங்களைப் பற்றிக் கூறிவருகிறேன். முதன் முதலாக விஷூசிகை அல்லது வாந்திபேதி (Cholera) என்ற என் தாக்குதலின் மாற்றுருவத்தைப்பற்றிக் கூறுகிறேன். கேளுங்கள்.

இந்த மாற்றுருவத்தை முதல்நாள் நம் சந்திப்பில் கூறியபடிப் பிரதேசத்திற்குறிய ஒரு பெருவாரி வகையில் பெயரிட்டு வைத்திய அறிஞர்கள் அழைக்கிறார்கள். பொதுவாக என்னை மூன்று வகையாகப் பிரிப்பர். அவைகளின் பெயர்கள்:

1. காலரைன் (Cholerine)
2. ஏஷியாடிக் காலரா (Asiatic Cholera)
3. வரண்ட காலரா (Dry Cholera)

சரித்திர ஆதாரத்தின்படி என்னைப் போலுள்ள மற்றொரு வியாதியைத்தான் மேல் நாட்டு வைத்தியர்கள், ஹிப்பகிரேட்ஸ் (Hippocrates) என்ற வைத்திய மேதையின் காலத்திலிருந்து இப்பெயரிட்டு அழைத்து வந்தனர் என்று கூறலாம். ஆனால் அவ் வியாதியின் குறிகளும் என் குறிகளை ஒத்துத்தான் இருந்தன. உண்மையாக என் வகையைச் சேர்ந்த மேற்கூறிய மாற்றுருவங்கள் இந்தியாவில் 1817-லிருந்து மக்களைத் தாக்கி வந்த போதிலும், 1829 ஆண்டிற்கு முன்னால் மேல் நாட்டினருக்குத் தெரியாமல்தான் இருந்தது. 1817-ம் ஆண்டில் நான் என் மாற்றுருவத்துடன் கீழ் வங்காளத்தில் தோன்றிப் பிறகு சிறிதுச் சிறிதாக இந்தியா முழுவதும் பரவினேனென்று வைத்திய சரித்திர அறிஞர்கள் கூறுகிறார்கள். நான் பிறந்தது எனக்குத் தெரியாதா? என்று என்னைக் கேட்டுவிடாதீர்கள். முதலில் நீங்கள் பிறந்தது உங்களுக்குத் தெரியுமா? பிறர் சொல்லித்தானே கேட்கிறீர்கள். இவ்விஷயத்தில் நானும் அப்படியே! 1820–21ம் ஆண்டுகளில் நான் ஹிந்துஸ்தானத்திலிருந்து வியாபாரிகளுடன் ஒட்டிக்கொண்டு இலங்கை (Ceylon), பர்மா (Burmah), சீனம் (China) முதலிய தேசங்களுக்கும் பாரசீக வளைகுடா (Persian Gulf) வின் மூலம் பாரசீகத்திற்கும், ஐரோப்பாவிற்கும் பரவினேன். 1840–41ம் ஆண்டுகளில் கல்கத்தாவிலிருந்து சீனத்திற்குப் பிரிட்டிஷ் சேனை (British Force) அனுப்பப்பட்டது. இது காஷ்கர் (Kazhgar), பொக்காரா

(Bokhara) காபூல் (Cabul), ஆப்கானிஸ்தானம் (Afghanistan) வழியாக சீனத்திற்குச் சென்றது. இதன் மூலமாக 1845–46ல் பாரசீகத்திற்கும், ரஷ்யாவிற்கும் பரவினேன். 1848ம் ஆண்டில் அமெரிக்காவிற்கும் பரவினேன். 1853–54ம் ஆண்டுகளில் ஈஜிப்டுக்கும் பரவினேன். இவ்வாறாக நான் பரவிய இடங்களில் மிகக் குரூரமாக மக்களைத் தாக்கி கணக்கற்ற மக்களை எனக்கு இரையாக்கிக்கொண்டேன். இதைக்கண்டு மக்கள் யாவரும் நடுநடுங்கினர். வங்காளத்தில் 1860–61–62ம் ஆண்டுகளில் என்னால் ஏற்பட்ட சேதம் அபாரம். இதைக்கண்டு நடுங்கிய அப்பொழுது வங்காளத்தை ஆண்டுவந்த கிழக்கிந்திய கம்பனியார் (East India Company) என்னை ஒழிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முயன்றனர். இதுதான் என்னை இந்தியாவில் அழிக்க செய்த ஏற்பாடுகளின் இன்றைய நிலையின் அஸ்திவாரமாகும். தவிர அன்றைய மேல்நாட்டு வைத்திய மேதைகள் என்னைப் பற்றிய விரிவான ஆராய்ச்சிகள் நடத்தலாயினர். 1854-ம் ஆண்டில் டாக்டர் ஸ்னோ (Dr. Snow) என்பவர் தன் இடைவிடா முயற்சியாலும், ஆராய்ச்சியாலும் நான் ஒட்டுவாரொட்டி என்றும், என்னால் தாக்குண்ட வியாதியஸ்தனின் மல, மூத்திராதிகள் தற்செயலாக பிறஜனங்கள் அவர்களை யறியாமல் உட்செல்லவதுவானால், என்னால் அவர்கள் தாக்கப்படுவது நிச்சயம் என்று நிரூபித்தார். 1861ம் ஆண்டில் கிழக்கு லண்டனில் (East London) இருந்த டாக்டர் நெட்டன் ராட் கிளிப் (Dr. Netten Red Cliffe) என்பவர், என்னால் தாக்குண்ட ஒரு வியாதியஸ்தனால் வெளியிடப்பட்ட மலத்தை நான்கு காலன் அசுத்தத் தண்ணீரில் கலந்து பன்னிரண்டு மணிநேரம் அவ்விடத்திற்குரிய (Tropical) சூரிய உஷ்ணத்தில் வைத்து மறுநாள் காலை பத்தொன்பது பேர்களுக்கு, ஆளுக்கு ஒரு அவுன்ஸ் வீதம் அத்தண்ணீரைக் குடிக்க வைத்தார். இதைச் சாப்பிட்ட முப்பத்தாறு மணி நேரங்களுக்குள்ளாக இதில் ஆறுபேர்கள் காலராவால் பீடிக்கப்பட்டனர். 1883ம் ஆண்டில் பெர்லின் நகரைச் சேர்ந்த R. கோச் (R Koch) என் போதகாசிரியர், Dr. G. காப்கி (Dr. G. Gaffky) ஆகிய இருவரும் என்னைப்பற்றித் தீவிரமாக ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்து, 1887ம் ஆண்டில் அவ்வாராய்ச்சியை முடித்து அதை விவரமாக வெளியிட்டனர். எனவே என்னைப்பற்றிய முழு விவரங்களையும் கண்டுபிடித்த பெருமை கோச் போதகாசிரியரையே சாரும். இவர்தான் கோம்மா (Comma) என்ற கிடாணுக்களின் (Bacillus) செயலால் நான் இவ்வாறு மாற்றுருவத்தை அடைகிறேன் என்று நிரூபித்தார்.

பொதுவாக நான் இத்தகைய மாற்றுருவத்துடன் மக்களைத் தாக்க கோமா கிடாணுக்கள் (Comma Bacillus) ஒரு காரணமெனக் கூறுகிறார்கள். ஆனால் இக்காரணமன்றியும் இன்னும் பல காரணங்கள் உள. அவை உடம்பில் பலர் சந்தர்ப்பவசத்தினாலோ அல்லது வறுமையினாலோ அபரிமித உபவாசங்கள் அனுசரிப்பதும், குடல்களைப்பற்றிய சில கோளாறுகளும், மது முதலிய குடி பழக்கங்களும் அடிக்கடி பேதியுண்டாக்கும் மருந்துகளை உட்கொள்ளுதலுமென பொதுவாகக் கூறலாம். இவற்றில் குடல்களைப்பற்றிய கோளாறுகளே தலையாயது எனக் கூறலாம்.

இது தவிர வைத்திய விஞ்ஞானிகள் எனக்கு அபய சக்தி (Immunity) உண்டெனக் கருதுகிறார்கள். இத்தகைய அனுமானம் இயற்கையின் சக்திக்கும், சட்டத்திற்கும் முரணானதேயாகும். மேலும் என் தாக்குதல்கள் ஏற்படக்கூடியக் குறிப்பிட்ட பிரதேசத்தில் வசிக்கும் மக்களை நான் தாக்கும் வீரியத்தை, புதிதாக அவ்விடத்திற்கு வந்த மக்களை நான் தாக்கும் வீரியத்துடன் ஒப்பிட்டால், அது மிகக் கடுமையானதே எனவும் வைத்திய விஞ்ஞானிகள் கருதுகின்றனர், பொதுவாக என்னால் ஒரு முறை தாக்கப்பட்டவர்கள் மறுமுறைத் தாக்கப்படாமலிருக்கும் அபய சக்தியை (Immunity) நான் பெற்றிருக்கவில்லை என்றே கூறுவேன். இவ்வாறு ஒரு முறைத் தாக்கப்பட்டவர் மறுமுறைத் தாக்கப்படும்போது ஏற்படும் என் தாக்குதலின் வீரியம் அப்பொழுதுள்ள தாக்கப்பட்டவரின் தேக நிலையைப் பொறுத்ததேயாம். எவ்வித ஜாதி, மத, பேதங்களும் நான் பாராட்டுவதில்லை. ஆனால் வைத்திய அறிஞர்கள் நான் பெண்களை விட ஆண்களையே அதிகம் தாக்குகிறேன் என்று கூறுகிறார்கள். இதையும் நான் அங்கீகரிக்கத் தயாராய் இல்லை என்றே கூறுவேன். மேற்கூறிய விவரங்களிலிருந்து நீங்கள் நான் ஒரு நியதிக்கும், வரம்புக்கும், கட்டுப்பட்டவனல்ல என்பதைத் தெரிந்துகொள்வீர்களென நம்புகிறேன்.

இனி நம் அடுத்த சந்திப்பில் நான் உண்டாக காரணமெனக் கூறப்படும் கோமா கிடாணுக்களைப்பற்றியும் மற்ற விவரங்களைப் பற்றியும் விவாதிப்போம். வணக்கம்.

(தொடரும்)

சத்ய சுகபேதி அல்வா
சத்ய வேத மெடிக்கல் ஹால்
டாக்டர் ஜி.எல். சாமி, திருச்சிறுப்பள்ளி

வாதிமகன் வைத்தியன்

—:(G. L. பிரகாசம்):—

மருத்துவ நூலின் முறையை அறியாதவர் வாத பித்த கபங்களாகிய மூன்று நாடிகளை அறிய மாட்டாதவராய் கைகளைப் பிடித்துப் பார்த்து மனம்போலச் சொல்லுதல், சிறு நோயினரை அநியாயமாய்க் கொடு நோயினர் என்று பகர்தல், பிணியொன்றிருக்க மற்றொன்றை மாற்றி இயம்புதல், தம்மால் தீர்க்க முடியாத நோயையும் தாம் தீர்த்துவிடுவதாக உறுதி கூறல், தாமே உயரிய மருத்துவர் எனப் பெருமை பேசுதல், இத்தகைய தன்மை வாய்ந்த வைத்தியர்களுக்கு எக்காலமும் மோட்சமில்லை; நரகந்தான் கிட்டும்,” என அகத்தியனார் கூறுகிறார். ஆனால் இப்பூவுலகின் கண் மருந்தின் சுத்தி முறைகளை நன்குணர்ந்து நன்மையடையும் பொருட்டு நோயாளரின் உடற் கூறுகளையும் பார்த்து அவர் தம் கையினால் செய்யும் தொழிலினையும் கண்டு பின்னர் நாடிகளின் நிலை, உடல் வன்மை யாகியவற்றில் கருத்தைச் செலுத்தி குருவினிடம் புத்தி வைத்து “கற்றுணர்ந்த கலை வல்லார்களின் யோசனையையும் செயல்களையும் கேட்டு” மருத்துவம் புரிதல் நன்மையாகும். இங்ஙனம் மாறுபாடில்லாத முறைகளைக் கடைப்பிடிக்கவில்லை யேல் அம்மருத்துவரின் இருபத்தொன்று தலைமுறை சுற்றமும் வேரற்றுப் போய்விடும்:- என கடும் சாபத்தை அள்ளி வீசிவிட்டு சென்றார் முக்காலமுணர்ந்த ஞானி; ஆம்! “வயித்தியனே யானைக்கால் முப்பு வேண்டும்; மறந்து விட்டுச் செய்வதனால் கிருபை யென்ன? சயித்தியமா முபசார வார்த்தை சொன்னால் தம்பிக்கு வந்த நோய் தானே போமோ?... ஆகா எவ்வளவு அழகாக பாட்டிலே உரைக்கிறார். ஒருவர் எபிடைரைன் மாத்திரைகளை 10, 15 ஒரே வேளைக்கு கொடுத்து சாவை உண்டாக்கினார்; மற்றொருவர் ஸிபிலிஸ் நோயுக்கு நியோசால்வார்சன் கொடுத்து வந்தார், சருமம் வெண்மையடைய தொடங்கி சூரிய வெளிச்சம்பட்டாலும் தாங்கமுடியாத அளவு வேதனையை உண்டாக்கி ஒரே மின்னலில் சாவை உண்டாக்கினார். இதெல்லாம் உணர்ந்த ஞானிகள் தான் வாது குறிவயித்தியரே! சொல்லக்கேளீர்; வாகாகக் கண் மூன்று தலைகள் நான்கு, நீதமுடன் முகமமைந்து கைகளாறு, நிலை சரீரங்களெட்டுக் கால்கள் பத்து, “வீதமிதன் பயனறிந்தார் வியாதி தீர்ப்பார்”; விதமறியார் மானிடரைப் பழியே செய்வார்; என கூறினாரோ—என்னமோ! வீதமிதன் பயனறிந்தார் வியாதி தீர்ப்பார்—என்பதை பாருங்கள். வியாதியின் ரோக லக்ஷணங்கள் என்ன? வியாதி எங்கே ஆரம்பித்திருக்கிறது? ஒருவருக்கு அதிமூத்திர ரோகம் என்றால் மூத்திரம் வருவதைத தடை செய்தால் போதுமா? உற்பத்தி—அதி உற்பத்தியை ஆக வண்ணம்

செய்தாலல்லவா வியாதி திரும் என்பதையெல்லாம் பற்றி புஸ்தகத்தில் படித்து பயனில்லை, கற்றுணர்ந்த வல்லபவர்களின் ஞானங்களை கேட்கவேண்டும் சொற்பொழிவு வாயிலாக; அப்பொழுதுதான் வியாதியின் விவரணம் நமக்கு தெரியும். அதில்லாமல் எல்லாம் தெரிந்த மாதிரி வீட்டிலே இருப்பதிலோ—சினிமாவிலோ காலத்தை கழிப்பதிலோ—கண்காக்ஷியிலே கருத்தை செலவிடுவதிலிலோ—கதாகால க்ஷேபத்திலே சீதா கலியாணத்தை கேட்பதிலோ—நாம் வருங்கால சந்ததிகளின் ஆதரவு பெற்ற டாக்டர்களாக திகழ முடியாது. ஏனெனில் பாண்டுரோகத்தில் வீக்கத்தை குறைக்க மருந்து கொடுத்தாலும் திருப்பி, திருப்பி வந்து வீங்குகிறதிற்க்கு என்ன காரணம் என்பதை அறியாமையிலேயே அநேக உயிரை பலியிடுகிறோம். இரத்தமெல்லாம் தண்ணீராக, விஷநீராக போய் விட்டதே என்ன காரணம்? நாம் அறிவதில்லை. அறிய முயற்சிப்பதில்லை. வெற்றி கிட்ட வேண்டுமானால்—ஒவ்வொரு சங்க மீட்டிங்கிற்க்கும் தவராது, பெருவாரியாக திரண்டு கேட்க வேண்டும். அப்பொழுதுதான் திறமையான மருத்துவனாக திகழமுடியும். சென்ற கூட்டத்தில் Dr. K K முத்து “இரத்த அமுக்கம்” குறித்தும் (இளவேனிற் காலம்); Dr M. P. முத்துராமையர் “நீரழிவு” குறித்தும் (முதுவேனிற் காலம்) பேசினார்களென்றால்—அது காலத்துக்கேற்ற சொற்பொழிவுகள். அதனை கேட்டிருக்க வேண்டியது ஒவ்வொருவரின் தவரா கடமை. ஆனால் “நாங்கள் எங்கள் கடமையை செய்கிறோம். மருத்துவக் கடலிலே பன்னெடுங்காலம் உழன்றுவரும் மருத்துவ பரம்பரைகளான Dr. G. சீதாராம்; Dr. M P. முத்துராமையர்; Dr. G. A. B. சார் B. A; Dr. P. S. P நாயுடு ஆகியோர்களின் பரம்பரை அநுபவக் கருத்துக்கள் பலருக்கு பயன்தரும் என்பதில் அச்சமில்லை. ஆகவே மணிக்கு மணி மக்களின் உயிரைகாக்கும் நேரத்திலே உங்களுக்காக இவர்களைக்கொண்டு அநுபவ ஆய்வு. மதித்தீர்ப்புக்களை சொற்பொழிவாகச் செய்து வருகிறோம் எல்லாம் உங்களுக்காகத்தான் நேரத்தை செலவிடுகிறோம். விருப்பமிருந்தால் காரியத்தை சாதித்துக்கொள்ளலாம். ஆனால் “நாங்கள் எங்கள் கடமையை செய்துதான் வருகிறோம்”. வயிற்றுப்போக்கு உற்பத்தியாக காரணம் என்ன? மூத்திரம் அதிகமாக சுரக்க காரணம் என்ன? இரத்தத்தில் பித்தம் எப்படி கலக்கிறது? விஷப்பாண்டு ஏன் உற்பத்தியாகிறது? இரத்தப் பேதியை நிறுத்த மருந்து கொடுத்தாலும் மீண்டும் பேதியாவதேன்? சாவு ஏன் ஒரு கேஸில் சம்பவிக்கிறது? அதற்க்கு யார் காரணம்?? நண்பரே நன்றாக யோஜித்து பாருங்கள். வீதமிதன் பயனறிந்தால் தானே வியாதியை போக்க முடியும். விதமறியாதவர்கள் மானிடரை பழியே செய்வார்கள் என்பது உண்மையல்லவா? ஆகவே திரளுங்கள். கேளுங்கள். நீங்கள் உங்களை திறமை வாய்ந்தவர்களாக செய்துக்கொள்ள அரிய சந்தர்ப்பத்தை நாங்கள் கொடுக்கிறோம்.

உடம்பிலுள்ள செல்லுலர் மெம்பிரேன்களில் நீர் சேர்ந்து கொள்வதுதான் பாண்டு வீக்கமென்றால், அந்த மெம்ரனில் எப்படி நீர் சேர்ந்துகொள்கிறது; Nettle Rash என்னும் கணைத் தழும்பில் சர்மத்திலிருக்கிற இழைகள் சுருங்கி, நீர் சேர்ந்து தழும்புகள் உண்டாகின்றன என்றால், சர்மத்திலுள்ள இழைகள் ஏன் சுருங்குகின்றன; பின்னிசிவு (Opis Thotonos) முன்னிசிவு (Empros Th tonos) பக்க இசிவு (Pleurus Thotonos) அனுஸ்தம்ப வாதம் (Lock. Jaw, Trismus) மாந்த வலி (Trismus Noscentium) என்றால் என்ன? அது ஏன் வருகிறது? முகப்பரு ஏன் உண்டாகிறது, அதற்கு காரணம் சர்மத்திலிருக்கிற சிபேஷியஸ் பாலிகில்ஸ் (Sebaceous Fsllicles) என்பது சீழ்க்கொள்வது தானா? நண்பரே! நீவிர் இவைகளை அறிய விரும்புகிறீரா?? நீங்கள் ஒவ்வொரு விஷயத்தையும் துல்லியமாக தெரிந்திருக்க வேண்டுமானால் சங்க மீட்டிங்கிறக்கு தவராது வாருங்கள். A. T. H M A உங்களுக்கு உதவ காத்திருக்கிறது. மந்திரம், மருத்துவ நூல், பழைய நூல் இவைகளை யாய்ந்துணர்ந்த அறிவுடைப் பெரியார்களின் உறுதியான நியாய முறைகளை கேளுங்கள். மருத்துவ நூலறிவில்லாத மருத்துவர்களும், மருந்துகளின் கைப்பாகம், செய்பாகம் அறியா மருத்துவர்களும் மருத்துவத் தொழிலுக்கு உரியராகார் என புலஸ்தியர் வாகடசூஸ்திரம் *300*-ல் குறிப்பிட்டிருப்பது போல் நடக்காதீர்கள். கடல் சூழ்ந்த இவ்வுலகத்தின் கண், விரோதிகள் பலரும், விடத் தன்மையுடைய பாதகர்களும் உண்டு, ஒவ்வொருவருடைய தாரதரங்களையும் நன்குணர்ந்து நீ மருத்துவம் செய்து புண்ணியமும், கீர்த்தியும் பொருந்தி வாழ்வாயாக. யார் வஞ்சனை செய்திடினும், நீ தரும் மருந்தில் யாதொரு குற்றமும் வேண்டாம். (கூறப்பா யார் கவடஞ் செய்திட்டாலும் கொடுக்கின்ற மருந்துகளிற் குற்றம் வேண்டா;)—இப்படி நடந்துக்கொள்ள வேண்டுமானால் சங்க மீட்டிங்கிற்கு வாருங்கள். இல்லா விட்டால் "பாருமே சங்க கூட்டத்தை விட்டுப் பண்டிதத்தைப் பார்த்தலைவார் பலனறியா ஹோமியோ டாக்டரப்பா! என்பதே முடிவாக போய்விடும். எங்கள் கடமையையும் நிறுத்திக் கொள்ள நேரிடும். நீங்கள் உங்கள் இஷ்டப்படி இந்த பாட்டிற்க்கு பலியாகலாம்.

"பாராமற் செய்வதிலே தோடம்தோடம்;
பழம்புண்ணளியரை வயித்தியனேயாவான்;
கூறுமலிருக்கவில்லை சாத்திரங்கள்
குணமுள்ள ராசியென்றாற் பலிக்கும் நூல்கள்;
தேறுமல் சொல்கேட்டுப் பரிகாரத்தைச்
செய்வதிலே பழிபாவஞ்சிக்குஞ்சிக்கும்;

கூறுன வுலகத்திலுயிரை யெல்லாம்
கொல்லுதற்கே தலையெடுத்த கூற்றனுமே."

அன்பரே! உம்மை பலிகளுக்கு ஆளாக்க நாம் விரும்பவில்லை. உம்மை ஓர் கூற்றுவனுக்கவும் விரும்பவில்லை.

நாங்களுங்கூட எந்த வியாதிகளாக இருந்தாலும்கூட கற்றுணர்ந்த தலை வல்லாராகிய, "தி வாய்ஸ் ஆப் ஹோமியோபதி ஆசிரியர் கவிராஜ் Dr G சீதாராம்" அவர்களின் யோசனையையும் செயல்களையும் கேட்டு மருத்துவம் புரிந்திருக்கிறோம். ஆலோசனைகளை பரிமாறிக்கொள்வதால் சாத்தியம், அசாத்தியம், கஷ்டசாத்திய மறிந்து அநேக வியாதியஸ்தர்களை மரண தேவதையின் மரண அணைப்பிலிருந்து விடுவித்திருக்கிறோம். அண்ணாரின் யோசனை செயல்களின்படி செவ்வாய்கிழமையும் உத்திராடாதி நக்ஷத்திரமும் கூடிய தினத்திலே நோய்கண்ட ஒருவனை கைவிட்டிருக்கிறோம். ஏனெனில்

உண்மையாய் உரைக்க கேளாய்!
உத்திரட்டாதி சுரமே வந்தால்,
தண்மையாய் ஏழாம் நாளில்
தானது திரும்பா விட்டால்,
வண்மையாய்ப் பதினஞ்சாம் நாள்
மரண மென்றுறுதி யாகச்
செம்மையாய் இந்த நூலைத்
தெரிந்து நீ செப்பலாமே—என

புலிப்பாணி *500*-ல் கூறியது பொய்யாகுமா? இதைக்குறித்து தானே—"பார்க்கின்ற சோதிடமே பிராய காலம்—பகரும் விவகாரமொடு பிராயச்சித்தம், எனக் கூறிவிட்டு

"கூர்பாரு; தாதிலிலக்கணமும் பாரு;
கோள்பாரு; நாள்பாரு; குணமும் பாரு;
நேர்பாரு; தேச பேதங்கள் பாரு;
நிலை பாரு; கிரகவுச்ச நீசம் பாரு;
பேர்பாரு; இவனை நீ பிறகு பாரு;
பேரதிலே கீர்த்தியின் றன்மை பாரு;
வேர் பாரு; தழை பாரு; மிஞ்சினக்கால்
மெல்ல மெல்ல பற்பசெந் தூரம் பாரே."

எனக் கூறியதின் பொழிப்புரைகளை பாருங்கள். தாதுக்களினிலக்கணத்தையும், நாள் நட்சத்திரங்களின் நன்மை தீமைகளையும், தேசங்களின் வேறுபாடுகளையும், நோயாளியினுடைய சாதகத்தில் கிரகங்கள் நிற்கும் உச்ச நீச நிலைகளையும், நோயாளியினுடைய பேர் பலன்களையும் பார்த்துவிட்டு, பின்பு நோயாளியை பார்க்க வேண்டும். இன்னும், இப் பெயருடையான் தரும காரியங்களினாற் புகழடைந்தவனா வென்றும், இவன் சுற்றம், இனம் இவை ஒழுக்கமுடையனவா என்றும் பார்த்து, இவை யாவும் நலமுடையனவாயிருப்பின் இத்தகையானுக்குப் பற்ப செந்தூர முதலிய மருந்துகளை கொடுக்க முயல்வாயாக என்பதேயாகும். இவ்வாறு சகலமும் அறிந்து மருந்து கொடுக்கும் மருத்துவன் வெத்துவேட்டுக் காரர்களுக்கு பின்னோடியாக விளங்கும் கூஜாக்களும் அல்ல! நாகரீக பவுசுகளுமல்ல.!!

"வாதிமகன் வைத்தியனும் வடிவுமாகும் வகையறியான் பண்டிதங்கள் செய்ய மாட்டான்" என்று புலஸ்தியர் வாகட சூத்திரம் 300-ல் கூறியது முக்காலும் உண்மையே. மருத்துவ நூலறிவுள்ளவர்கள்; மருந்துகளின் கைப்பாகம் செய்பாகம் அறிந்தவர்கள்; மருத்துவத் தொழிலுக்கு உரியவர்கள்; வழி வழியாய் வந்த வாதிகள்.

வாழ்த்துகிறோம்

ஜூலை 8.

ஹோமியோ அனுதாபியும், திருச்சி தாராநல்லூர் அலங்கவிலாஸ் மான்யப்பள்ளி ஆசிரியருமான: **திரு. வித்துவான் மா. மு. சுப்பையா** அவர்களுக்கும், சேலம் ஜில்லா சிராப்பள்ளி, ஆசிரியை **திரு. து. தனலட்சுமி** அம்மையார் அவர்கட்கும் 8-7-54 அன்று வியாழன் காலை 6-மணிக்கு சுற்றமும் நட்பும் சூழ வாழ்க்கை வரைவு வெகு விமரிசையாக நடைபெற்றது. இல்வாழ்வில் ஒன்றுபடும் இளம் இதயங்களை வாழ்த்தி பல வாழ்த்துக்கள் வந்தன.

ஜூலை 12.

திருப்பத்தூர் Dr. T. M. முனிசாமி நாயுடு அவர்களின் பேரக்குழந்தைகளான **"வீரமணி–கலாமணி"** ஆகியோருக்கு காதணி விழா நடைபெற்றது.

கட்டுரை போட்டி! **பரிசு பெறுங்கள்!!**

18 கட்டுரைகள்

Dr K. K. முத்து அளிக்கும் 1 தங்கமெடல், முடிவு தேதி 1-10-54.

டிப்தீரியா:—சூதக பந்தம், ப்ராங்கோ நிமோனியா, காதிலிருந்து சீழ் வடிதல், (Chronic otorrhea)–நரம்பு வலிகள், (Local nerve pains)–சிறு நீரகங்கள் ஸ்தாபிதம், (Ne phritis)–இரத்தம் விஷமித்தல், (Septi cemia)–கிருமிகள்.

கான்சர்:—வெளி ஆண், பெண் உறுப்புகளில் ஏற்படும் அரிப்பு (Kraurosis Uvlvae)—நிண நீர் கோளங்கள், மூத்திரப்பை ஸ்தனங்கள், அன்னவாகி சினைப்பை, பாண்கிரியாஸ், ப்ராஸ்டேட் கோளங்கள், சருமம் அன்னப்பையும்–இரத்த சோகையும், கருப்பபையின் வாய்.

மேலே கண்டவைகளை வைத்து 18-கட்டுரைகள் ஹோமியோபதி சம்பந்தமாக எழுதி, அதற்கு சிகிச்சையையும் சேர்த்து எழுத வேண்டும்.

கட்டுரை எழுதுபவர்கள் இம் மாதிரியான வியாதிகளை பார்த்திருக்கிறார் என்பதற்கு ஒவ்வொரு வியாதியிலும், குறிப்பிட்ட வியாதியஸ்தரிடமிருந்து அத்தாக்ஷி வாங்கி கட்டுரையுடன் சேர்த்து அனுப்ப வேண்டும்.

கட்டுரையாளர் பத்திரிக்கைக்கு சந்தாதாரராக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு கட்டுரையும் தி வாய்ஸ் ஆப் ஹோமியோபதியில் நான்கு பக்கங்கள் வரக்கூடியதாக இருக்கவேண்டும்.

இந்த போட்டியில், Dr. K. K. முத்துவின் உசிதப்படி தேர்ந்தெடுக்கும் 18 கட்டுரைகளில் ஆசிரியரின் முடிவான தீர்மானப்படி குறிப்பிட்ட 1 நபருக்கே தங்கமெடல் அளிக்கப்படலாம்.

எல்லோருமே சரியாக 18 கட்டுரைகளையும் எழுதி சட்டதிட்டங்களை பூர்த்தி செய்திருந்தால், தெரிவு செய்யப்பட்ட பலரில் முக்யமான விஷயங்களை தொகுத்து அளித்தவர் யாரோ அவருக்கு ஆசிரியர்; வெளியிடுவோர் உசிதப்படி தங்கமெடலும், மற்றவர்களுக்கு வெள்ளி மெடலும் கிடைக்கும்.

—ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

N. B:—மேலே கொடுத்த குறிப்புகள் ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை. இந்த மொழிபெயர்க்கப்பட்ட குறிப்புகளில் ஆங்கிலக்குறிப்புகளின் கருத்தும் பேதாபேதங்களும் பொருந்தும். ஆங்கில குறிப்பு தேவையுள்ளோர் 2-அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கேள்வி போட்டி

இதுதான் அறிகுறிகள்

படிக்கும்பொழுது வலதுபக்க வரி இடதுபக்கம் போகுதல்.

When reading, the right page laps over the left.

வயிற்றில் ஜீர்ணமாகாத வெந்த முட்டை இருப்பது போன்ற உணர்ச்சி. வயிற்றில் வலி, இந்த வலி எப்பொழுதும் சாப்பிட்டபின் வருவது.

Sensation of an undigested hard boiled egg in the stomach. pain in the stomach, always comes after eating.

இரவுகளில் உறுதியான விசித்திரமான விளையாட்டு சேஷ்டை.

A constant drooling at night.

காலையில் காபி குடித்தபின் வயிற்றுப் போகுதல்; காது கேட்கமுடியாத அளவுக்கு காதில் இரைச்சல்.

Roaring in the ears, with difficult hearing. Diarrohea after coffee.

முகத்தில் ஐஸ்போன்ற சில்லிப்புள்ள வியர்வையுடன் கடுமையான வாந்தி.

Violent vomiting, with ice-cold sweat of face.

நடந்துகொண்டிருக்கும்பொழுது இருமல் தொந்திரவு கொடுப்பதில்லை; ஆனால் நடந்துகொண்டிருப்பதை நிறுத்தினால் இருமல் தொந்திரவு கொடுக்கும்.

The cough is not trouble some while walking, but when she stops the cough is much aggravated.

ஆண் குறி எழுச்சியின்றி இந்திரிய ஸ்கலிதம்.

Emissions without erections

வலது கண் மிகவும் வலியாக இருத்தல்; இடது கண்ணை விட பெரிதாக தோன்றுதல்.

Right eye very painful, feeling much larger and more protruded than the left.

கண்கள் மஞ்சள் நிறம்; நாக்கு வீங்கி இருத்தல்; இலேசான காரியங்களால் துரிதமாக பலவீனமடைதல். சரீரம் பூராவும் மஞ்சள் நிறமாகுதல்.

Yellow color of the eyes. Sweling of the tongue Easily tired by slight exertion. Yellow color of the whole body.

எல்லா வஸ்துகளும் மாறுதலாக தோன்றுதல்.

Pro found in difference to every-thing.

கர்ப்பாசயத்திலிருந்து ஏராளமான இரத்த பெருக்கு.

Profuse uterine Haemorrhage.

பழங்களும் குளிர்ந்த பானங்களும் வயிற்றில் ஈயத்தை போட்டால் போல் இருத்தல்; மாதவிடாய் காலங்களில் கருப்பு நிறமான இரத்தம் போகுதல்.

Fruits and cold drinks lie on the stomach like lead. Discharge of black blood between the menses periods.

திறந்த வெளியில் செல்வதால் தலைவலி, சமனம்; எல்லா அறிகுறிகளும் நாளுக்கு நாள் மாறுதல், முக்யமாக அதே நிமிஷத்தில் மோசமடைதல்.

Head ache relieved by going out in the open air. All symptoms are worse every other day at precisely the same hour.

இந்த போட்டியில் 13 அறிகுறிகள் கொடுக்கப்பட்டுள்ளன அதற்கு ஒவ்வொன்றிற்கும் ஏற்ற ஒரு மருந்தை மட்டும் எழுதி அனுப்புங்கள்.

கொடுக்கப்பட்ட எல்லா 13 அறிகுறிகளுக்கும் எழுத வேண்டும். பூராவும் சரியான விடை உள்ளவர்களுக்கே முதல் பரிசு வழங்கப்படும்.

இந்த போட்டியில் கலந்துகொள்வோர், சங்கம்; பத்திரிக்கை ஆகியவற்றில் சந்தாதாரராக இருந்து, இரண்டிலும் எவ்

வித முன்பாக்கி இன்றியும், நடைமுதல் வருடத்திற்கு சந்தா செலுத்தியும் இருக்கவேண்டும்.

ஓர் குறிப்பிட்ட வருடத்தில் செலுத்தி பின்னர் செலுத்தாமல், நடைமுதல் வருடத்திற்கு மட்டும் செலுத்தி இருப்போர் பாக்கியுள்ள வருடத்திற்கு செலுத்தினல் தான் போட்டியில் கலந்துக்கொள்ளலாம்.

போட்டியில் கலந்துக்கொள்வோர், விடைகளை தனி காகிதத்தில் எழுதி அத்துடன் எல்லா சங்க, பத்திரிகை ரசீதுகளையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

இதன் சரியான விடை சீலிடப்பட்ட கவரில் ஆசிரியரிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

முதல் பரிசு ஹானிமென் தங்கமெடல்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

அடுத்த மாதங்களுக்கு வரும் அறிகுறிகளுக்கு தொடர்ந்து எழுத வேண்டும். தொடர்ந்து விடை அனுப்புவோரே உண்மையில் போட்டியில் கலந்துக்கொள்பவராவர். மற்றவர் நிராகரிக்கப்படுவார்.

"பயோகெமிஸ்டிரி வைத்திய முறை"

[பிரசுர உரிமை பெற்றது]

ஜார்ஜ் W. காரே M. D; அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டதும், அவரது அனுபவம்மிகுந்த ரஸமான கேஸ்கள் கொண்டதுமான புத்தகத்தை Dr. K.K. முத்து தமிழாக்கம் செய்துள்ளார். நமது சஞ்சிகையில் தொடர்ந்து வெளிவரும்.

முதல் பகுதி 1955 ஜனவரி இதழில் ஆரம்பமாகலாம். அல்லது முன்கூட்டியே பிரசுரமாகலாம். உங்கள் பிரதிகளுக்கு உடனே சந்தா செலுத்துங்கள். அரிய சந்தர்ப்பத்தை இழக்காதீர்கள்.

சென்னை, செங்கற்பட்டு ஜில்லா

ஹோமியோபதி டாக்டர்களுக்கு

வேண்டுகோள்

அன்புமிக்கீர்,

வணக்கம்! ஹோமியோபதிக்கு G, O. 142 வைத்தவிர சர்க்கார் ஒருவித ஆதரவும் தந்ததாக—தருவதாகவோ தெரியவில்லை. ஆனால் பெருமை உணர்ந்த சிலரால் அசெம்பளி வரை பேச்சு நடைபெறுகிறது. அரசாங்க பதவி வகிப்பவர்கள் அலோபதியர்! இந்திய சர்க்காரின் பக்கபலமாகயிருப்பவர்களோ பணமூட்டைகள்!! ஹோமியோபதி ஸ்தானம் வகித்துவிட்டால் நமக்கு ஏகபோக எய்ச்சல் பிழைப்பு இல்லை என்று முதல்வரும், மருந்துகளை அயல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்து இந்தியாவை வியாபார ஸ்தலமாக்கி காலரா, அம்மை, க்ஷயம் இவைகளின் பெயரால் அநியாயமாக கோடிக்கணக்கில் சம்பாதிக்கும் பணத்தை இனி பார்க்க முடியாமலாகிவிடுமே என்ற இரண்டாமவரின் எண்ணத்தாலும் அசெம்பிளிவரை வாதங்கள் கிளம்பியும் கீர்த்தி பெறவில்லை; வெற்றியடைய முடியவில்லை.

ஹோமியோபதியின் பலன்களை—சிறப்புத்தன்மையை சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், அமைச்சர்கள், தலைவர்கள், அறிஞர்கள் உணர்ந்து வருகிறார்கள். இந்நிலையில் ஓயாது சர்க்காருக்கு செய்தி தந்து கொண்டிருக்கவேண்டும்! சுயநலத்தின் காரணமாக ஹோமியோபதி பேச்சுக்கே இடந்தராமல் மறுக்கப்படுகிறது என்பதை அத்தாட்சிகளுடன் தெரிவிக்க வேண்டும் சர்க்காருக்கு! ஹோமியோபதி அங்கீகரிக்கப்படுவதினால் மக்களுக்கு குறிப்பாக கிராமவாசிகளுக்கு எத்தகைய பெரும் பலன் என்பதை எடுத்துக்காட்டுவதோடு அரசாங்கத்திற்கு எத்தனைகோடி ரூபாய்கள் மிச்சப்படும் என்பதை சுட்டிக்காட்ட வேண்டும்! அடுக்கிக்கொண்டு போக அக்கம்பக்கமுள்ள ஹோமியோபதியர்களின் அக்கரையும் தேவை எனவேதான் சகோதர, சகோதரிகளே! ஹோமியோபதி டாக்டர்களே!! நீங்கள் சென்னை வட்டாரத்திலும், செங்கல்பட்டு மாவட்டத்திலுமாக சேர்ந்து எத்தனை பேர்கள் இருக்கிறீர்கள்? உங்களின் புள்ளி விபரமும் அன்பு முகவரியும் தேவை! நம் ஜில்லாவுக்கென ஒரு கழகம் அமைக்க வேண்டும்—அதன் மூலம் எடுத்துரைக்க வேண்டும். பொதுக்கூட்டங்களில் ஊர்தோறும் ஹோமியோபதியின் சிறப்புகளை! சங்கம் அமைப்பதிலே அக்கரைகொண்டோர் எல்லோரும் நமக்கு உடனே [illegible]ர்களின் முகவரிகளை தபால்கார்டு மூலம் தெரிவி[illegible]

22263

சங்கம் அமைக்க வேண்டுவது எவ்வளவு முக்கியப்பிரச்சினை என்பது உங்கள் எல்லோருக்கும் தெரிந்ததே. அந்நிய வைத்திய கூட்டங்களும் சர்க்காரிலிருக்கும் வஞ்சகக்கூட்டமும் சமயம் பார்த்து கொண்டிருக்கிறது நம்மை குழியில் தள்ள! இனியும் தாமதிக்கவிட்டால் ஆபத்து! ஆபத்து!? ஆகவே, மீண்டும் அன்பால் ஆவேசமாக உரிமையுடன் அழைக்கிறேன், எழுதுங்கள், எழுதுங்கள் உங்கள் முகவரிகளை அனுபவ ஆண்டுகளுடன் கீழ்கண்ட நமது விலாசத்திற்கென்று!

DR. K. M. A. WAHAB, (Homeo)
Homeo Nursing Home,
TIRUKALIKUNDRAM, P. O.
(Chingleput District)

குறிப்பு:—செங்கல்பட்டு மாவட்டத்தில் ஹோமியோபதியர்கள் கழகம் நிறுவ அம் மாவட்ட தோழர்களும் முன்வந்திருக்கின்றனர். இது பாராட்டுதலுக்குறிய விஷயமே. சங்கம் நிறுவுவது அவசியமானது—அதனை வரவேற்கிறோம். ஹோமியோபதி நலனில் அக்கரைகொண்டுள்ள ஸ்தாபனங்களும், சென்னை, செங்கற்பட்டு ஜில்லாவின் மாணவர்களின் விலாசங்களையும் கொடுத்துதவுமென நம்புகிறோம்.

—**ஆசிரியர்.**

ஸ்பெஷல் கூட்டம்

திரளுங்கள்! திரளுங்கள்!!

1954-ஆம் ஆகஸ்ட்-மீ 29-உ ஞாயிறு மாலை 4-மணிக்கு திருச்சி டவுன் ஸ்டேஷன் ரோடு உருமி தனலெக்ஷமி வித்யாலயத்தில் சங்கத்தின் ஸ்பெஷல் கூட்டம் நடைபெறும். அதுபோது சென்னை Dr. P. K. சேகர் D. Sc. (Homoeo) D. Sc (Naturo) அவர்கள் "நியாயஸ்தலத்தில் வைத்திய சாட்சியம்" (Medical Jurisprudence) என்பது பற்றி சொற்பொழிவாற்றுவார்கள். அனைவரும் திரளாக வரவும்.

EDITED By Dr. G. Seetharam 41, Kurivian Tank St, Tiruchy. Published By Dr K K. Muthu, 52, Tanjore Road, Tiruchy. Printed By Dr. G. L. Swamy, Sole Proprietor, G. L. Swamy Press, 52, Tanjore Road, Tiruchy.

"வாய்ஸ் ஆப் ஹோமியோபதி"

(ஹோமியோபதியரின் முன்னேற்ற இதழ்)

ஆசிரியர்:

Dr. G. சீதாராம்.

உதவி ஆசிரியர்கள்:

Dr. P. S. P. நாயுடு, Dr. A. ஜான்.

வெளியிடுவோர்:

Dr. K. K. முத்து.

கட்டுரை அமைப்பாளர்கள்:

Dr. G. A. B. சார், B. A.
Dr. பெரியராஜா, M. D. (H)
Dr. சின்னராஜா,
Dr. G. L. பிரகாசம்,
குமாரி ஜூலியா எலிசபெத்,
Dr. (மிஸ்) N. பத்மாவதி,
Dr. K. M. A. வஹாப்,
இரா. துரைராசன்.

மேற்பார்வை உதவி:—**Dr. T. சுவாமிநாதன்.**

அச்சகம்:

ஜி. எல். சாமி பிரஸ்,
(Sole Proprietor: Dr. G. L. SWAMY)
52, தஞ்சை சாலை, :: திருச்சிராப்பள்ளி.



G. L. Swamy Press, 52, Tanjore Road, Tiruchy.